# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ / மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி / 16/4, 27– 04–2009 நாளிட்டது.

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 (1)(e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61(h) பிரிவின்படி, 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் 2008 ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, மேலேயுள்ள ஒழுங்குமுறை விதிகளைத் திருத்துவதற்கு ஒருசில திருத்தங்களைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளபடியாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86(1)(e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61(h) பிரிவின்படி, வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ / மரபுசார எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்கமுறைவிதி / 16/ 1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2–ல் வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது :–

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**

a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

b) இவை, இந்தத் திருத்தங்களின் இறுதி அறிவிக்கை ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 2ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 2ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (ஓ)கூறில், ‘‘ தமிழ்நாடு அரசு ’’ என்ற சொற்றொடருக்குப் பின்பு, ‘‘ அல்லது ஆணையம் ’’ என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் (5)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும் :

‘‘ (5) ஆணையம், மின் பகிர்வு உரிமம்தாரரால், மின்உற்பத்தியாளர்களுக்குச் செலுத்துவதற்காக மற்றும் சுய உபயோகிப்பாளர் / மூன்றாம் தரப்பு பயன்படுத்துநரால் மின்பகிர்வு உரிமம்தாரருக்குச் செலுத்துவதற்காக உரிய நடைமுறையைக் குறித்துரைக்கலாம்.’’

**4. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியில்,

(i). (i)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் (c) கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ii). (6)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், “ செலவுத் தொகையுடன் சேர்த்து ஒற்றைப்பங்கு சராசரி மின் கட்டணவீதம் பின்னர் மாற்றியமைக்கப்படும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக “உரிய மின் கட்டணவீதம் ’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**5. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியில்,

(a) முதலாம் வாக்கியத்திற்குப் பதிலாக, பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

“ மின்சாரம் வாங்குகை உடன்பாடு (மி.வா.உ.) மற்றும் மின்சாரம் கொண்டு செல்லுதல் உடன்பாடு(மி.கொ.உ) ஆகியவற்றின் படிவம், மின் உற்பத்தியாளர்கள் மற்றும் மின் பகிர்மான உரிமம்தாரருடன் கலந்தாய்வு செய்த பின்பு ஆணையத்தினால் உருவாக்கப்படுதல் வேண்டும்.’’

(b) இரண்டாம் வாக்கியத்தில், “மின்சாரம் வாங்குகை உடன்பாடுகள்’’ (“PPAs’’) என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “மின்னாற்றல் வாங்குகை உடன்பாடுகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**6. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 8ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 8ஆம் ஒழுங்குமுறைவிதியில், இனம் எண்.5 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் புதிய இனம் மற்றும் பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

“5A வங்கிக்கட்டணங்கள்.’’

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**(இரா. பாலசுப்பிரமணியன்)**
செயலாளர்